அன்புடையீர்! வணக்கம்....

பத்தாம் வகுப்பு தமிழ்ப் பாடத்திற்கான ஒரு மதிப்பெண் வினாக்கள் –தமிழ் முதல் தாள் மற்றும் இரண்டாம் தாள் – இயல் வாரியாக தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தமிழ் முதல் தாளில் உள்ள அனைத்து ஒரு மதிப்பெண் வினாக்கள் மற்றும் தமிழ் இரண்டாம் தாளில் முதல் 10 ஒரு மதிப்பெண் வினாக்கள் ஆகியன அந்தந்த இயல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. தமிழ் இரண்டாம் தாளில் வினா எண் 11 முதல் 20 வரையிலான வினாக்கள் பொதுத் தேர்வு அமைப்பில் கலந்து எடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் அளிப்பதன் மூலம் சிறந்த வெற்றியை ஈட்டலாம் என்ற நோக்கில் வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அரசு மாதிரி வினாத்தாள் 2012, மார்ச் 2012, ஜூன் 2012, அக்டோபர் 2012, மார்ச் 2013, ஜூன் 2013, அக்டோபர் 2013 ஆகிய ஏழு பொதுத் தேர்வில் கேட்கப்பட்ட தமிழ் முதல் தாள் மற்றும் இரண்டாம் தாளில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள் பயிற்சிக்காக தொகுக்கப்பட்டுள்ளன. அனைத்து வினாக்களுக்கும் விடைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன. பயன்படுத்தி வெற்றியை ஈட்டிட வேண்டுகிறேன்... பிழைகள் இருப்பின் தெரிவிக்கவும்....

அன்புடன்,

க. நாகராஜன்,

பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),

அஞ்சுகம் முத்துவேலர் அரசினர் மேல்நிலைப்பள்ளி,

திருக்குவளை - 610204, நாகப்பட்டினம் மாவட்டம்.

அலைபேசி: 7598868760, 9524302724.

மின்னஞ்சல்: nagarajangnsn@gmail.com.

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 1

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் ..........................

அ. நால்வர் நான்மணிமாலை ஆ. திருவள்ளுவமாலை இ. இரட்டைமணிமாலை

02. இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே - எனப் பாடியவர் ..........

அ. பாரதிதாசன் ஆ. பாரதியார் இ. சுரதா

03. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்............

அ. கால்டுவெல் ஆ. ஈராஸ் பாதிரியார் இ. ஜி.யு. போப்

04. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் ............

அ. திருக்குறள். நன்னூல் ஆ. திரிகடுகம். ஏலாதி இ. நற்றிணை. அகநானூறு

05. யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று கூறியது........

அ. அகநானூறு ஆ. திருக்குறள் இ. புறநானூறு

06. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - எனக் கூறிய நூல்

அ. ஏலாதி ஆ. புறநானூறு இ. திருக்குறள்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலை இயற்றியவர் ............................

08. ஏலாதியில் உள்ள பாக்களின் எண்ணிக்கை ..................................................

09. மாணிக்கவாசகர் பாடல்கள் .......................... திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

10. முப்பால் என அழைக்கப்படும் நூல் .............................................................

11. இன்றைய மதுரையில் ........................................... தமிழ்ச் சங்கம் இருந்தது.

12. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியில் அறிஞர் ...................

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. என்றுமுள தென்தமிழ் - துன்பம்

14. சங்க இலக்கியம் - கம்பர்

15. உலகப் பொதுமறை - மக்கள் இலக்கியம்

16. இடும்பை - திருக்குறள்

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை.

18. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ்.

19. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ்

20. நடுவணரசு 2004ஆம் ஆண்டு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் ..........

அ. திண்ணை ஆ. வளையல் இ. ஐந்து

02. பல் + தீது என்பது ............... எனப் புணரும்

அ. பல்தீது ஆ. பஃறீது இ. பலதீது

03. சொல்லின் முதலில் மட்டும் வருவது

அ. ஔகாரம் ஆ. ஐகாரம் இ. ஆய்தம்

04. வயலில் ஆடுகள் மேய்ந்தில என்பது .............

அ. வினாத் தொடர் ஆ. எதிர்மறைத் தொடர் இ. கட்டளைத் தொடர்

05. எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது....

அ. பிறவினைத் தொடர் ஆ. அயற்கூற்றுத் தொடர் இ. தன்வினைத் தொடர்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. வரும்+வண்டி = வரும் வண்டி - இதில் அமைந்துள்ள குறுக்கம் .........................

07. வளையல் - இச்சொல்லில் ஐகாரம் .................. மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

08. மகரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ......................................................

09. முள் + தீது = முஃடீது எனப் புணர்வது .................... குறுக்கமாகும்.

10. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும் போது அன்பரசன் திருக்குறளைக் ........................... என வரும்

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகு இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. எவ்வகைத் தொடர்? கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்

13. தொகைச்சொல்லை விரித்து எழுதுக: முப்பால்

14. ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக:

உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளது சங்க இலக்கியங்கள்

15. சந்திப்பிழை நீக்கி எழுது.

தமிழ்சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் என பிரித்து வளமடைய செய்தனர்

16. பிறமொழிச் சொல்லை நீக்கி எழுதுக.

அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடைபெற்றது.

17. உருவகத்தை உவமையாக மாற்றுக. விழிக்கயல்

18. உணர்ச்சித் தொடராக மாற்றுக: இமயமலை மிகவும் உயரமானது.

19. தேவையான நிறுத்தற் குறியிடுக. இன்றைய மொழியியல் அறிஞர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது என்பார் முனைவர் எமினோ

20. இலக்கணக் குறிப்பு எழுதுக. அருவினை

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 2

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. பெண்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று
அ. மணக்கொடை ஆ. அரசுப்பணி இ. வாக்குரிமை
02. இளங்கோவடிகளின் நண்பர்.............
அ. கம்பர் ஆ. திருத்தக்கத் தேவர் இ. சீத்தலைச் சாத்தனார்
03. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என அழைக்கப்படுவது
அ. சிலப்பதிகாரம் ஆ. மணிமேகலை இ. கம்பராமாயணம்
04. குடும்ப விளக்கு .......... படைப்புகளுள் ஒன்று
அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. கண்ணதாசன்
05. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர்
அ. சுப்பிரமணியன் ஆ. சுப்புரத்தினம் இ. கனகசபை
06. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ............ இல்லாமை
அ. வாக்குரிமை ஆ. பேச்சுரிமை இ. சொத்துரிமை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் ..................................... ஆகும்.
08. இளங்கோவடிகளின் தமையன் பெயர்.........................................................
09. பாவேந்தர் பாரதிதாசனார் ......................................... என அழைக்கப்படுகிறார்.
10. பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ள ஊர் ...............................
11. பெரியார் சமூக முரண்களையும் .................................................... எதிர்த்தவர்
12. கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை என்றவர் ........

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. யாரையோ நீ மடக்கொடி | - | கோப்பெருந்தேவி |
| 14. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே | - | வாயிற்காவலன் |
| 15. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லை | - | கண்ணகி |
| 16. வாழியெம் கொற்கை வேந்தே வாழி | - | பாண்டிய மன்னன் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
18. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
19. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது வள்ளுவர் வாக்கு.
20. பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகைப்படும்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

11. பலகை என்பது
அ. தனிமொழி ஆ. தொடர்மொழி இ. பொதுமொழி
12. இறந்தகால பெயரெச்சம்
அ. படித்த ஆ. படித்து இ. படிக்கும்
13. முருகன் படித்தனன் தேறினன் என்பது
அ. பெயரெச்சம் ஆ. வினையெச்சம் இ. முற்றெச்சம்
14. தொடர்மொழிக்கு எடுத்துக்காட்டு
அ. நிலங்கடந்தான் ஆ. வேங்கை இ. மண்
15. நல்ல பையன் என்பது
அ. தெரிநிலை பெயரெச்சம் ஆ. குறிப்புப் பெயரெச்சம் இ. குறிப்பு வினையெச்சம்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. மெல்லப் பேசினான் என்பது..................................... எடுத்துக்காட்டு ஆகும்.
07. வினைமுற்று ..........................., .............................. என இருவகைப்படும்.
08. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ................................................
09. ஓர் எச்சவினை ...................... கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
10. தொழிலைக் குறிக்கும் சொல் ..........................................................................

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. எழுது – இச்சொல்லை வினையெச்சமாக்குக.
13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக. ***ஐம்பால்***
14. ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக:
***பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.***
15. சந்திப்பிழை நீக்கி எழுது. ***அனைத்து துறைகளிலும் ஆண்களைபோலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்க வேண்டும்.***
16. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக: ***அவன் வீண் சிலவு செய்கிறான்.***
17. பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எழுதுக:
***இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது***
18. நிறுத்தற்குறியிட்டு எழுதுக : ***ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார்***
19. மரபுத் தொடருக்கேற்ற பொருளை எழுதுக: ***வாழையடி வாழையாக***
20. சொற்றொடரில் அமைத்து எழுதுக: ***பசுமரத்தாணி போல***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 3

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. கம்பரைப் புரந்தவர்

அ. ஔவையார் ஆ. புகழேந்தி இ. சடையப்ப வள்ளல்

02. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய உயரிய விருது

அ. பத்மஸ்ரீ ஆ. பாரத ரத்னா இ. பத்மவிபூசண்

03. கம்பர் எழுதிய நூல்களுள் ஒன்று

அ. சரசுவதி அந்தாதி ஆ. கார்நாற்பது இ. களவழி நாற்பது

04. கம்பராமாயணம் .............. காண்டங்களைக் கொண்டது

அ. மூன்று ஆ. ஐந்து இ. ஆறு

05. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் ............ பேராசிரியராகப் பணியாற்றினார்

அ. பொருளியல் ஆ. சமூகவியல் இ. அறிவியல்

06. அம்பேத்கரை ஆராய்ச்சியின் சிகரம் எனப் புகழ்ந்துரைத்தவர்

அ. நேரு ஆ. இராசேந்திர பிரசாத் இ. பெரியார்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. இராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் ................................................

08. கம்பராமாயணத்திற்குக் கம்பர் இட்ட பெயர் ................................................

09. கம்பரின் காலம் ................................................ நூற்றாண்டு

10. அம்பேத்கரின் இயற்பெயர் ................................................

11. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ................................................

12. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே ............................ ஆகும்.

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. இடர் | - | அ. நிலவு |
| 14. நாவாய் | - | ஆ. துன்பம் |
| 15. இறை | - | இ. படகு |
| 16. இந்து | - | ஈ. தலைவன் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமின்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.

18. அம்பேத்கர் மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

19. அம்பேத்கர் எல்பின்ஸ்டன் பள்ளியில் தம்முடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார்.

20. அம்பேத்கர் ஒரு நாளில் பதினெட்டு மணி நேரத்தைக் கல்வி கற்பதற்காகவே செலவழித்தார்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. இளவழகன் வந்தான். இது ................................................ தொடர்

அ. வெளிப்படை ஆ. குறிப்பு இ. கட்டளை

02. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ...................ஐக் குறிக்கும்

அ. பசு ஆ. காளை இ. கன்று

03. மாடு என்னும் சொல் ................................................ ஆகும்

அ. உயர்திணைப் பொதுப்பெயர் ஆ. அஃறிணைப் பொதுப் பெயர் இ. விரவுப் பெயர்

04. கதிர்வேல் வெற்றிலை தின்றான். இதில் உள்ள குறிப்புச் சொல்

அ. இனங்குறித்தல் ஆ. ஒன்றொழி பொதுச்சொல் இ. விகாரச் சொல்

05. வருக வருக என்பது .................. உணர்த்தும் அடுக்குத் தொடர்

அ. துன்பத்தை ஆ. விரைவை இ. இன்பத்தை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. பிரித்தால் பொருள் தராதது ................................................

07. கல்வியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றது. இதில் தமிழ்நாடு என்பது ........... சொல்.

08. வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர். இதில் ஐவர் என்பது ...........பாலைக் குறிக்கும்.

09. தீ தீ தீ என்பது ..................................ஐ உணர்த்தும் அடுக்குத் தொடர் ஆகும்.

10. ஒரு சொல், தன் பொருளையும் குறித்துத் தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது ....... எனப்படும்.

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. ***செல்*** **-** இச்சொல்லைப் பெயரெச்சமாக்குக.

13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக. ***அறுசுவை***

14. ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக:

***இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.***

15. சந்திப்பிழை நீக்கி எழுது.

***ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்***

16. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக:

***நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.***

17. உருவகத்தை உவமையாக மாற்றுக: முகமதி

18. எவ்வகைத் தொடர்? ***ஐயோ, முள் குத்திவிட்டதே!***

19. மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக: ***குட்டிச் சுவர்***

20. பிறமொழிச் சொல்லை நீக்கி எழுதுக.

***அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 4

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல் .........

அ. அகநானூறு ஆ. நற்றிணை இ. கலித்தொகை

02. கோப்பெருஞ்சோழனின் அவைக்களப் புலவர்களில் ஒருவர் ...............

அ. மிளைகிழான் நல்வேட்டனார் ஆ. பிசிராந்தையார் இ. கண்ணகனார்

03. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை..............

அ. ஓவியக் கலை ஆ. இசைக்கலை இ. பேச்சுக்கலை

04. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது

அ. புறநானூறு ஆ. கலித்தொகை இ. நற்றிணை

05. தமிழ்த் தென்றல் என அழைக்கப்படுவர்

அ. ரா.பி. சேதுப்பிள்ளை ஆ. சோமசுந்தரபாரதியார் இ. திரு.வி.க.

06. நற்றிணையைத் தொகுப்பித்தவர் ................

அ. பன்னாடு தந்த மாறன் வழுதி ஆ. இளம்பெருவழுதி இ. உக்கிரப்பெருவழுதி

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை................................

08. அரி என்னும் சொல்லின் பொருள்...................................................................

09. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ................. பேரெல்லையும் கொண்ட நூல்

10. பேச்சு முடிவில் ...................... கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

11. வெறும் பேச்சுக்கும் .............................................பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.

12. மேடைப் பேச்சுக்கு .............................................................. உயிர்நாடி ஆகும்.

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. செறு | - | பனையோலைப்பெட்டி |
| 14. வித்து | - | புதுவருவாய் |
| 15. யாணர் | - | விதை |
| 16. வட்டி | - | வயல் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. மேடைப்பேச்சினை தொடங்கும்போதே எடுப்புடன் தொடங்குதல் வேண்டும்.

18. பேச்சின் முக்கூறுகள் என்பவை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் ஆகும்.

19. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின்மேலிட்ட இனிப்புப் போன்றவை.

20. தொடக்கவுரைக்குப் பிறகு, பொருளை விரித்துப் பேசும் முறை தொடுத்தல் எனப்படும்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. மீமிசை ஞாயிறு என்பது

அ. இனங்குறித்தல் ஆ. ஒருபொருட்பன்மொழி இ. அடுக்குத்தொடர்

02. இது செய்வாயா? என்று வினவிய போது நீயே செய் என்று கூறுவது

அ. இனமொழி விடை ஆ. ஏவல் விடை இ. நேர்விடை

03. குறிப்பால் உணர்த்து விடை

அ. நேர் விடை ஆ. மறைவிடை இ. உறுவது கூறல் விடை

04.அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? என வினவும் வினா

அ. கொளல் வினா ஆ. கொடை வினா இ. ஐய வினா

05. விடை ..................... வகைப்படும்

அ. எட்டு ஆ. ஆறு இ. ஏழு

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே .......................................... என்பர்

07. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது ........................... வினா

08. இது செய்வாயா என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது ..... விடை

09. ஆடத் தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது ...... விடை

10. வினா ............................................................................... வகைப்படும்.

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. ***வா*** - இச்சொல்லை வினையெச்சமாக்குக.

13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக. ***நாற்றிசை***

14. ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக:

***மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்றது***

15. சந்திப்பிழை நீக்கி எழுது. ***மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.***

16. சொற்றொடரில் அமைத்து எழுதுக. ***மழை காணாப் பயிர்போல***

17. உருவகத்தை உவமையாக மாற்றுக. ***பாதமலர்***

18. பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

***நான் இந்த காலேஜின் ஓல்ட் ஸ்டூடண்ட்***

19. ***திருக்குறளை அனைவரும் அறிவர்*** - எவ்வகைத் தொடர்?

20. இளமைப்பெயர்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| ***கீரி*** | - | ***குஞ்சு*** |
| ***கோழி*** | - | ***கன்று*** |
| | - | ***பிள்ளை*** |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 5

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம்

அ. கம்பராமாயணம் ஆ. பெரியபுராணம் இ. சிலப்பதிகாரம்

02. பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர் ...........

அ. பெ. சுந்தரனார் ஆ. வெ. இராமலிங்கனார் இ. மீனாட்சி சுந்தரனார்

03. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர்

அ. மாறநாயனார் ஆ. அப்பூதியடிகளார் இ. திருநீலகண்டர்

04. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர்

அ. எடிசன் ஆ. வால்ட் டிஸ்னி இ. ஈஸ்ட்மன்

05. உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்வை மட்டும் காட்டும் படம்

அ. கருத்துப்படம் ஆ. செய்திப்படம் இ. விளக்கப்படம்

06. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் ............ என்னும் பொருளால் ஆனது

அ. செல்லுலாய்டு ஆ. புரோமைடு இ. கார்பைடு

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் ..........................................................

08. சேக்கிழாரின் காலம் கி.பி. ........................................................ நூற்றாண்டு

09. மேதி என்ற சொல்லின் பொருள் .......................................................

10. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு .................................................. இருக்கும்.

11. படப்பிடிப்புக் கருவியை ............................................... பொருத்துவதும் உண்டு.

12. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் ......... என அழைப்பர்.

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. ஈஸ்ட்மன் | - | ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி |
| 14. எடிசன் | - | படச்சுருள் |
| 15. எட்வர்டு மைபிரிட்சு | - | கருத்துப்படம் |
| 16. வால்ட் டிஸ்னி | - | இயக்கப்படம் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

18. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

19. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இரு கண்களாக எம்.ஜி.ஆர். கருதினார்.

20. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. தேன் போன்ற மொழி - இதில் உவமை

அ. தேன் ஆ. மொழி இ. தேன்மொழி

02. பின்வருவனவற்றுள் எது தொகையுவமை?

அ. பவளவாய் ஆ. தேன் போன்ற மொழி இ. முத்துப் போன்ற பல்

03. மலரன்ன சேவடி - இதில் உள்ள உவம உருபு

அ. சேவடி ஆ. அன்ன இ. மலர்

04. பவளவாய் - இதில் உவமேயம்

அ. பவளம் ஆ. வாய் இ. வாய்ப்பவளம்

05. முழவு உறழ் தடக்கை - இதில் உள்ள உவம உருபு

அ. உறழ ஆ. முழவு இ. தடக்கை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. உவமேயத்திற்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் ............................. எனப்படும்.

07. மான் ........................................................................ மருளும் பார்வை.

08. உவமானத்தையும் உவமேயத்தையும் வேறுபடுத்தாது இரண்டும் ஒன்றே என ஒற்றுமைப்படுத்திக் காட்டுவது .....................

09. தாயொப்பப் பேசும் மகள் என்ற தொடரில் உவம உருபு ................................

10. உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது .....................

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. ***கயற்கண்*** - உருவகமாக மாற்றுக.

13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக: ***முத்தமிழ்***

14. ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக:

***இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.***

15. சந்திப்பிழை நீக்கி எழுது. *திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போட வல்லது*

16. சொற்றொடரில் அமைத்து எழுதுக. ***மலையேறி விட்டது***

17. ***வேல்விழி திருக்குறள் படித்தாள்*** - வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

18. இரு பொருள் தருக. ***மெய்***

19. தேவையான நிறுத்தற் குறியிடுக. ***கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.***

10. சிங்கம் என்பதன் இளமைப் பெயரை எழுது.

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 6

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 6 × 1 = 6

01. போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர்..................

அ. பிள்ளைப்பாண்டியன் ஆ. ஒட்டக்கூத்தர் இ. வில்லிபுத்தூரார்

02. நாளிகேரம் என்பதன் பொருள்

அ. வாழை ஆ. கரும்பு இ. தென்னை

03. சிற்றிலக்கியங்களின் வகை

அ. எண்பது ஆ. தொண்ணூற்றாறு இ. பதினெட்டு

04. கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்... எனக் கூறுவது

அ. தேவாரம் ஆ. திருவாசகம் இ. திருப்பாவை

05. பழந்தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்

அ. கோதுமை ஆ. மயில்தோகை இ. பட்டு

06. பண்ணொடு தமிழொப்பாய்... எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல்

அ. திருவாசகம் ஆ. திருக்குறள் இ. தேவாரம்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 6 × 1 = 6

07. இலெமூரியாவை .................................................... நாகரிகத் தொட்டில் என்பர்

08. தனக்குவமையில்லா ஒரு ......................................................... தமிழ் இனம்

09. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் எனக் கூறுவது .............................................

10. போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் ........................................................

11. நால்வகைப் பாக்களும் வயலுக்கு ............................................ அமைந்துள்ளன.

12. சீத்தையர் என்பதன் பொருள் ............................................................................

**இ. பொருத்துக** 4 × 1 = 4

13. தமிழ்கெழு கூடல் - திருவாசகம்

14. நீரின் வந்த நிமிர்பரிப் புரவி - புறநானூறு

15. கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் - சிலப்பதிகாரம்

16. குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள - பட்டினப்பாலை

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க** 4 × 1 = 4

17. தமிழர்கள் அரபுநாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்

18. சான்றோனாதலே கல்வியின் முடிவாகும்.

19. அறத்தின் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு.

20. பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 5 × 1 = 5

01. மேற்கு நாடு + என்பது ........................ எனச் சேரும்

அ. மேற்குநாடு ஆ. மேநாடு இ. மேனாடு

02. கருமை + குழி என்பது .................. எனும் விதிகளின்படி புணரும்

அ. ஆதிநீடல், இனமிகல் ஆ. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல்

இ. ஈறுபோதல், இனமிகல்

03. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது ........

அ. நிலைமொழி ஈறு நீங்கும் ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்

இ. வருமொழி முதல் கெடும்

04. மரம் + அடி = மரவடி இதில் இடம் பெற்றுள்ள புணர்ச்சி

அ. திசைப்பெயர் புணர்ச்சி ஆ. மகரஈற்றுப் புணர்ச்சி இ. பண்புப்பெயர் புணர்ச்சி

05. அடி அகரம் ஐ ஆதல் என்ற விதிப்படி புணர்ந்த சொல்

அ. வெற்றிலை ஆ. பைங்கூழ் இ. மூதூர்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 5 × 1 = 5

06. பசுமை + இலை = பாசிலை - இதில் இடம் பெற்றுள்ள புணர்ச்சி ........................

07. செம்மை + ஆம்பல் என்பது .......................... எனப் புணரும்

08. கிழக்கு + நாடு என்பது ..................... எனப் புணரும்

09. இரு சொற்கள் சேரும் போது தோன்றல், கெடுதல், திரிதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை ............................... என்பர்.

10. கருமை + விழி = கருங்குயில் என...................... விதியின்படி புணரும்.

**இ. சுருக்கமாக விடையளி** 10 × 1 = 10

11. வல்லினம் மிகா இடத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

12. உருவகத்தை உவமையாக்குக: ***அடிமலர்***

13. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

***தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன***

14. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

***மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது***

15. ***ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக*** - பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

16. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

***வேல்விழி திருக்குறள் படித்தாள்***

17. வழூஉச் சொல்லை நீக்கி எழுதுக.

***ஆத்தங்கரை அருகாமையில் நாகரிகம் தோன்றியது***

18. இருபொருள் தருக: ***மாலை***

19. ***அவசரக்குடுக்கை*** - இம்மரபுத் தொடருக்கான பொருளை எழுதுக.

20. தொகைச் சொல்லை விரித்து எழுதுக. ***மூவேந்தர்***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 7

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** **6 × 1 = 6**

01. திருநாவுக்கரசர் காலம் .................. ஆம் நூற்றாண்டு

அ. கி.பி. 12 ஆ. கி.பி. 7 இ. கி.பி. 9

02. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் .....................

அ. சிறியர் ஆ. பெரியார் இ. உறவினர்

03. உடையவர் நினைக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று பகைமை என்னும் இருளை அறுப்பது

அ. கேள்வி ஆ. கல்வி இ. செல்வம்

04. திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர்

அ. அப்பர் ஆ. மருணீக்கியார் இ. வாசீகர்

05. ஞால் என்ற சொல்லின் பொருள்

அ. உலகம் ஆ. தொங்குதல் இ. சுற்றுதல்

06. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் - என்று கூறியவர்

அ. திருவள்ளுவர் அ. திருமூலர் இ. திருநாவுக்கரசர்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** **6 × 1 = 6**

07. தமிழர்கள் நிலத்தை ......................... வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்

08. உலகம் என்னும் தமிழ்ச் சொல் ................ என்னும் சொல்லின்அடியாகப் பிறந்தது

09. திருநாவுக்கரசரின் தமக்கையார் ......................................................... ஆவார்

10. தாண்டகவேந்தர் என அழைக்கப்படுபவர் .....................................................

11. இல்லாரை ............................................................................... எள்ளுவர்

12. அறனீனும் இன்பமும் ஈனும் .......................................... தீதின்றி வந்த பொருள்

**இ. பொருத்துக** **4 × 1 = 4**

13. நாமார்க்கும் குடியல்லோம் - திருவள்ளுவர்

14. அச்சமில்லை அச்சமில்லை - திருநாவுக்கரசர்

15. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி - பாரதியார்

16. அறிவு அற்றம் காக்கும் கருவி - ஔவையார்

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க** **4 × 1 = 4**

17. தமிழர்கள் பரந்துபட்ட அறிவியல் சிந்தனை உடையவர்கள்.

18. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரிசெய்த செய்தியை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

19. பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்தமருத்துவம் எனப்படும்

20. மழையை அமிழ்தம் என்றவர் திருவள்ளுவர்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** **5 × 1 = 5**

01. பொருளிலக்கணம் ............. வகைப்படும்

அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து

02. அகத்திணைகள் ................. வகைப்படும்

அ. மூன்று ஆ. ஐந்து இ. ஏழு

03. சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் .................. காலத்திற்குரியன

அ. முன்பனி ஆ. பின்பனி இ. இளவேனில்

04. மருதநிலத்திற்குரிய தெய்வம்

அ. முருகன் ஆ. திருமால் இ. இந்திரன்

05. பாலை நிலத்திற்குரிய பறவைகள்

அ. கிளி, மயில் ஆ. நாரை, அன்னம் இ. புறா, பருந்து

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** **5 × 1 = 5**

06. திருமால் ............................................................. நிலத்திற்குரிய தெய்வம்

07. யாமம் என்பது இரவு 10 மணி முதல் ........................................ வரை ஆகும்

08. நெய்தல் திணைக்குரிய தொழில் .................................................. ஆகும்

09. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ............... திணைக்குரிய பறைகள்

10. மருதம், நெய்தல் ஆகிய இரண்டனுக்கும் ................ பெரும்பொழுதுகளும் வரும்.

**எ. சுருக்கமாக விடையளி** **10 × 1 = 10** 11.

11. வல்லினம் மிகும் இடத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

12. வினைப்பகுதியை எச்சமாக்குக:

தமிழர்கள் நிலத்தினை ஐவகையாகப் ................(பிரி) வாழ்ந்திருக்கிறார்கள்

13. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

தமிழ் இலக்கியங்கள் தமிழர்தம் வாழ்வை எதிரொலிப்பது.

14. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்

15. அடியற்ற மரம் போல - சொற்றொடரில் அமைத்து எழுதுக.

16. தொகைச் சொல்லை விரித்து எழுதுக: ஐந்திணை

17. வழூஉச் சொல்லை நீக்கி எழுதுக. வேர்வை சிந்த உளைக்க வேண்டும்

18. அன்பரசன் திருக்குறள் கற்றான் - பிறவினைத் தொடராக்குக.

19. இருபொருள் தருக: ஆறு

20. பொருத்துக:

| | | |
|---|---|---|
| நற்சங்கு | - | வினைத்தொகை |
| செல்வச்செவிலி | - | பண்புத்தொகை |
| | - | உருவகம் |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 8

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. சீறாப்புராணம் ................. காண்டங்களை உடையது

அ. ஐந்து ஆ. மூன்று இ. ஆறு

02. கேழல் என்பதன் பொருள்

அ. பன்றி ஆ. புலி இ. எருமை

03. உமறுப்புலவர் எழுதிய நூல்களில் ஒன்று

அ. கம்பராமாயணம் ஆ. முதுமொழிமாலை இ. பெரியபுராணம்

04. காந்தியடிகளை அரை நிருவாணப் பக்கிரி என ஏளனம் செய்தவர்

அ. ஆபிரகாம் லிங்கன் ஆ. சர்ச்சில் இ. ஹிட்லர்

05. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல்

அ. பைபிள் ஆ. பகவத் கீதை இ. நன்னூல்

06. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை

அ. ஆடம்பரம், வீண்செலவு ஆ. எளிமை, சிக்கனம் இ. அன்பு, அருள்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. காந்தியடிகள் ................................................ என்னும் நாடகநூலைப் படித்தார்

08. இன்னா செய்தார்க்கும் என்னும் குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் ...........

09. சீறாப்புராணத்தை இயற்றியவர் ....................................................................

10. காந்தியடிகள் ...............................ஐப் படித்ததன் மூலம் மனவுறுதியைப் பெற்றார்

11. கேசரி என்ற சொல்லின் பொருள் ....................................................................

12. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் ..................................................................

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. கான் - கரடி

14. உழுவை - சிங்கம்

15. மடங்கல் - புலி

16. எண்கு - காடு

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.

18. இளைஞர்கள் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

19. கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகியன அறப்போராட்டங்கள் ஆகும்.

20. காந்தியக் கொள்கைகள் உலகை வழிநடத்திச் செல்கின்றன.

### தமிழ் இரண்டாம் தாள்

**உ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. புறத்திணைகள் ................ வகைப்படும்

அ. ஏழு ஆ. பத்து இ. பன்னிரண்டு

02. நிரைகவர்தல் என்பது..................

அ. கரந்தைத் திணை ஆ. வெட்சித்திணை இ. காஞ்சித்திணை

03. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது................

அ. வஞ்சித்திணை ஆ. காஞ்சித்திணை இ. வாகைத்திணை

04. ஒருதலைக் காமம் என்பது ...........

அ. அன்பின் ஐந்திணை ஆ. பெருந்திணை இ. கைக்கிளை

05. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது

அ. நொச்சித்திணை ஆ. தும்பைத் திணை இ. காஞ்சித்திணை

**ஊ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. பாடாண்திணை என்பது ........................................................... ஐக் கூறுவது

07. அகப்பொருள் வாழ்வியல் எனில், புறப்பொருள் ..................................... ஆகும்.

08. எயில் காத்தல் ................................................................... திணையாகும்.

09. பெருந்திணை என்பது ...................................................................................

10. கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்பது ............................. திணையாகும்.

**எ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

12. எவ்வகைத் தொடர்? ***இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா?***

13. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

***ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்***

14. சந்திப்பிழை நீக்கி எழுதுக. ***அறவழியை பின்பற்றி பெறுகிற விடுதலையே நிலைக்கும் என அவர் எடுத்து கூறினார்.***

15. ***ஆகாயத்தாமரை*** -இம்மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

16. தொகைச் சொல்லை விரித்து எழுதுக: ***ஐம்பொறி***

17. ஏற்ற இடங்களில் நிறுத்தற்குறியிடுக. *நான் மொழியால் குஜராத்தியன் நாட்டால் இந்தியன் உலக நிலையில் உலகன் ஆனால் மனிதனாக இருத்தல் வேண்டும்*

18. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல் எழுதுக.

***எல்லா ஸ்டூடன்சும் பஸ் ஏறி ஸ்கூலுக்குச் சென்றார்கள்***

19. இருபொருள் தருக: நகை

20. பொருத்துக:

| | | |
|---|---|---|
| புகுக | - | பண்புத்தொகை |
| செங்கதிர் | - | பெயரெச்சம் |
| | - | வியங்கோள் வினைமுற்று |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – ௯

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 6 × 1 = 6

01. வள்ளலாரின் இயற்பெயர்

அ. சம்பந்தர் ஆ. இராமலிங்கர் இ. தாயுமானவர்

02. பணை என்னும் சொல்லின் பொருள்

அ. அரசு ஆ. ஆல் இ. மூங்கில்

03. நெய்தல் கலியைப் பாடியவர்

அ. ஓரம்போகியார் ஆ. கபிலர் இ. நல்லந்துவனார்

04. பெருமாள் திருமொழியில் ................ பாசுரங்கள் உள்ளன

அ. இருநூற்றைம்பது ஆ. நூற்றைந்து இ. நூறு

05. வடிவுடை மாணிக்கமாலை என்னும் நூலை எழுதியவர்

அ. இராமலிங்கர் ஆ. கபிலர் இ. குலசேகராழ்வார்

06. கலித்தொகை ............ நூல்களில் ஒன்று

அ. பத்துப்பாட்டு ஆ. எட்டுத்தொகை இ. பதினெண்கீழ்க்கணக்கு

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 6 × 1 = 6

07. இராமலிங்கர் தமிழ்மொழியே ........................................ தரும் என்று கருதினார்

08. இராமலிங்கர் சத்தியதருமச்சாலையை நிறுவிய இடம் ........................................

09. கவிகை என்பதன் பொருள் ........................................................................

10. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் .................................. குலசேகரர் பாடியதாகும்

11. கலம்பக நூல்களில் முதல் நூல் ..........................................................

12. அருட்பிரகாச வள்ளலார் .............................. ஆம் ஆண்டு இறவா நிலை எய்தினார்.

**இ. பொருத்துக** 4 × 1 = 4

| | | |
|---|---|---|
| 13. திருவருட்பா | - | நந்திவர்மன் |
| 14. பெருமாள் திருமொழி | - | நல்லந்துவனார் |
| 15. கலித்தொகை | - | இராமலிங்கர் |
| 16. நந்திக்கலம்பகம் | - | குலசேகர ஆழ்வார் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க** 4 × 1 = 4

17. பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என அழைக்கப்படுகிறது.

18. இராமலிங்கர் ஒன்பது வயதிலேயே பாடல் புனையும் திறன் பெற்றிருந்தார்

19. உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றவர் வள்ளலார்

20. பாரதியார் இராமலிங்கரை புதுநெறி கண்ட புலவர் எனப் போற்றினார்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 5 × 1 = 5

01. பா.............. வகைப்படும்.

அ. நான்கு ஆ. ஐந்து இ. ஆறு

02. ஆசிரியப்பா................ வகைப்படும்

அ. மூன்று ஆ. நான்கு இ. ஐந்து

03. நல்லவை - இச்சொல்லை அலகிட்டால் ............. எனப் பிரியும்

அ. நேர்நேர் ஆ. நிரைநேர் இ. நேர்நிரை

04. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ................. முடிவது சிறப்பு

அ. ஆகாரத்தில் ஆ. ஏகாரத்தில் இ. ஓகாரத்தில்

05. சிறப்பு-என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு

அ. நாள் ஆ. பிறப்பு இ. மலர்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 5 × 1 = 5

06. வெண்பா .................................................................................. வகைப்படும்

07. ஆசிரியப்பாவின் வேறு பெயர் ................................................................ ஆகும்

08. ஆசிரியப்பாவின் ஓசை ........................................................................ ஆகும்

09. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வருவது .......... ஆகும்

10. வெண்பாவின் ஓசை ............................................................................. ஆகும்.

**இ. சுருக்கமாக விடையளி** 10 × 1 = 10

11. வல்லினம் மிகும் இடத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

12. ஒலி மரபுப் பிழை நீக்கி எழுதுக. ***குதிரை கத்தும்***

13. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக. ***வடலூர் சத்தியதருமச்சாலை இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றன.***

14. சந்திப்பிழை நீக்கி எழுதுக. ***வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்***

15. உரிய வினை மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

***மாறன் ஓவியத்தை .....................(வரைந்தான் / புனைந்தான்)***

16. தொகைச் சொல்லை விரித்து எழுதுக: ***மூவிடம்***

17. ஏற்ற இடங்களில் நிறுத்தற்குறியிடுக. *இராமலிங்கர் அவ்வழியே சென்றபோது இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார் என்று கூறினார் திகம்பர சாமியார்*

18. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல் எழுதுக.

***வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்***

19. இருபொருள் தருக: மதி

20. பொருத்துக:

| | | |
|---|---|---|
| மயில் | - | குழறும் |
| கூகை | - | கரையும் |
| | - | அகவும் |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் –10

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. சாலை. இளந்திரையன் எழுதிய கவிதைத் தொகுப்பு

அ. மானுடம் வெல்லும் ஆ. பூத்தது மானுடம் இ. வானம் வசப்படும்

02. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி

அ. பத்தாம் வகுப்பு ஆ. பன்னிரண்டாம் வகுப்பு இ. எட்டாம் வகுப்பு

03. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர்

அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. தாரா பாரதி

04. தமிழக அரசின் சிறந்த நூலுக்கான விருது பெற்ற சாலை. இளந்திரையனின் நூல்

அ. உரை வீச்சு ஆ. உரை முழக்கம் இ. திருமந்திரம்

05. பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பயில குறைந்தபட்ச கல்வித் தகுதி

அ. பட்டப்படிப்பு ஆ. பன்னிரண்டாம் வகுப்பு இ. பத்தாம் வகுப்பு

06. செத்தை என்பதன் பொருள்

அ. மரணம் ஆ. சிறிது நேரம் இ. குப்பை கூளம்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் ..........................

08. 1991இல் சாலை. இளந்திரையன் தமிழக அரசின் ...................... விருது பெற்றார்

09. சங்க காலத்தில் பெண்கள் ........................................ கடந்து செல்லக் கூடாது

10. நாள்தோறும் கல்வியில் ................................ உருவாகிக் கொண்டிருக்கின்றன.

11. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் ...... தேர்வும் உண்டு

12. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் .............. விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. வினையே ஆடவர்க்குயிர் - தாரா பாரதி

14. முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை - குறுந்தொகை

15. உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே - தொல்காப்பியர்

16. விரல்கள் பத்தும் மூலதனம் - திருமூலர்

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

18. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

19. உயிரி தொழில் நுட்பத் துறை சிறந்த வேலைவாய்ப்புத் துறையாக விளங்கி வருகிறது.

20. தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் போட்டித் தேர்வுகளை நடத்துகிறது.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது

அ. உவமையணி ஆ. பிறிதுமொழிதலணி இ. வஞ்சப்புகழ்ச்சி அணி

02. ஒரு சொல் இருபொருள்பட அமைந்து வருவது

அ. இரட்டுறமொழிதல் ஆ. தற்குறிப்பேற்ற அணி இ. இரட்டைக்கிளவி

03. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் கற்பனையை ஏற்றிப் பாடுவது

அ. வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ. தற்குறிப்பேற்ற அணி இ. பின்வருநிலையணி

04. மலர்தல் என்னும் பொருள் தரும் சொல்

அ. விள்ளல் ஆ. துப்பு இ. செய்யுள்

05. புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் ..................

அ. வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ. தற்குறிப்பேற்ற அணி இ. பின்வருநிலையணி

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. அணி என்ற சொல்லின் பொருள் ............................................................

07. உண்பவர், உணவு, உண்ணும் பொருள் எனப் பல்வேறு பொருளைத் தரும் சொல்......

08. தற்குறிப்பேற்ற அணி என்னும் சொல்லைப் பிரித்தால் ........ என வரும்.

09. செய் என்ற சொல்லின் பொருள் ...................... மற்றும் ....................... ஆகும்.

10. செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது.....

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10** 31.

11. வல்லினம் மிகும் இடத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

12. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக

***மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்***

13. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

***இன்று, இந்த நிலை முற்றிலும் மாறி விட்டன.***

14. சந்திப்பிழை நீக்கி எழுதுக. ***கைதொழில் ஒன்றை கற்று கொள்***

15. ***நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்*** - சொற்றொடரில் அமைத்து எழுதுக.

16. தொகைச் சொல்லை விரித்து எழுதுக: ***நானிலம்***

17. வழூஉச் சொல்லை நீக்கி எழுதுக. ***எண்ணெ வெல அதிகமாகி விட்டது.***

18. பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

***அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது***

19. இருபொருள் தருக: ***மெய்***

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.: ***கயிறு திரித்தல்.***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – அரசு மாதிரி வினாத்தாள் 2012

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது
அ. ஒழுக்கம் ஆ. காலமறிதல் இ. அடக்கமுடைமை ஈ. பெரியாரைத்துணைக்கோடல்

02. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்
அ. முத்து ஆ. பவளம் இ. மாணிக்கம் ஈ. மரகதம்

03. கம்பரைப் புரந்தவர்
அ. ஔவையார் ஆ. புகழேந்தி இ. சடையப்பவள்ளல் ஈ. சீதக்காதி

04. பெண் அடிமையானதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ............... இல்லாமை
அ. வாக்குரிமை ஆ. பேச்சுரிமை இ. சொத்துரிமை ஈ. எழுத்துரிமை

05. கீழ்க்காண்பனவற்றுள் காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து
அ. இன்னாசெய்யாமை ஆ. இன்சொல் கூறுதல் இ. எளிமை ஈ. சிக்கனம்

06. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ............
அ. ஓவியக்கலை ஆ. இசைக்கலை இ. பேச்சுக்கலை ஈ. நடனக்கலை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீக்குவதே ...................... என நற்றிணை குறிப்பிடுகிறது.

08. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் ....................................................

09. திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப் புகழ்பா வினங்கள் மடைப் போக்கா - இப்பாடலடிகளில் செய்யுளின் வரம்புகளாகக் குறிப்பிடப்படுபவை ....................

10. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் .................... பேராசிரியராகப் பணியாற்றினார்

11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ........................................................... இருக்கும்.

12. தமிழர்கள் நிலத்தை ............................ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. தேவாரம் | - | உமறுப்புலவர் |
| 14. சீறாப்புராணம் | - | நல்லந்துவனார் |
| 15. கலித்தொகை | - | சாலை. இளந்திரையன் |
| 16. பூத்தது மானுடம் | - | திருநாவுக்கரசு |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின

18. இராமலிங்கர் தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கூறினார்

19. தமிழர்கள் அரபு நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்

20. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. வினைத்தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரைத் தேர்ந்தெழுதுக
அ. செய்தொழில் ஆ. மாறா இளமை இ. பூரிகிழங்கு ஈ. தேரும் திருவிழாவும்

02. கீழ்வருவனவற்றுள் உம்மைத் தொகையைத் தேர்ந்தெழுதுக
அ. தெருக்கடை ஆ. வெற்றிலைபாக்கு இ. விளக்கெண்ணெய் ஈ. தாயும்சேயும்

03. ஒருபொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக
அ. விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்தான் ஆ. இரவு பகல் பாராது உழைத்தான்
இ. உயர்ந்தோங்கிய மலையைக் கண்டான் ஈ. கயிறு திரிக்கிறான்

04. 'வௌவால்' - இச்சொல்லில் பயின்று வரும்குறுக்கம் யாது?
அ. ஐகாரக் குறுக்கம் ஆ. ஔகாரக் குறுக்கம் இ. மகரக் குறுக்கம் ஈ. ஆய்தக் குறுக்கம்

05. இறந்தகால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக
அ. வருகிறான் ஆ. வருவான் இ. வருகின்றான் ஈ. வந்தான்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. 'மரவேர்' என்பது ............................................................... விகாரம் ஆகும்.

07. 'வேய்புரை தோள்' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு .........................

08. நண்பகல் என்பது ............................................... திணைக்குரிய சிறுபொழுது

09. 'ஆடுவாயா' என்னும் வினாவுக்கு 'பாடுவேன்' எனக் கூறுவது................. விடை

10. மொழியமுது - இவ்வுருவகத்திற்கான உவமை.........................................

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. ***பெறு*** - இச்சொல்லை வினையெச்சமாக்குக.

13. ***இளமையில் கல்*** - இத்தொடரைச் செய்தித் தொடராக மாற்றுக.

14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் உள்ளது.***

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***உரிமைகுரல் கொடுத்த நல்லோர்களைதான் நாம் சீர்திருத்த செம்மல்கள் என சிந்தை மகிழ பாராட்டுகிறோம்.***

16. ***பொய்யா விளக்கு*** - இலக்கணக் குறிப்பு எழுதுக.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
***வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே***

18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
***மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகையாகப் பிரித்தார்கள்***

19. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.
***பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்***

20. ***நானிலம்*** - இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – மார்ச் 2012

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** **6 × 1 = 6**

01. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர்
அ. பாரதியார் ஆ. சுரதா இ. பாரதிதாசன் ஈ. கவிமணி

02. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ. சோழ நாடு ஆ. சேரநாடு இ. பாண்டியநாடு ஈ. பல்லவ நாடு

03. துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான் - இப்பாடல் அடிகளில் அமைந்த நயம்
அ. எதுகை ஆ. இயைபு இ. முரண் ஈ. அணி

04. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் - எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்
அ. திருக்குறள் ஆ. நாலடியார் இ. ஏலாதி ஈ. தேவாரம்

05. உலகில் மொழி உருவம் பெறுவதற்கு முன் ............... பிறந்து விட்டது என்பர்
அ. நாடகம் ஆ. நாட்டியம் இ. இசை ஈ. கூத்து

06. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்
அ. பேரறிஞர் அண்ணா ஆ. மு. வரதராசனார் இ. கா. அப்பாத்துரையார்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** **6 × 1 = 6**

07. அரி என்னும் சொல்லின் பொருள் ...............................................................
08. சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்து பாடியவர் ..................................................
09. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் ................................................
10. ஞாலம் என்னும் தமிழ்ச் சொல் ........................ என்னும் சொல்லடியாகத் தோன்றிது.
11. தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ............... ஆவார்
12. இராமலிங்கர் தமிழ் மொழியே ...................................... தரும் என்று கருதினார்.

**இ. பொருத்துக** **4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. கலித்தொகை | - | திருநாவுக்கரசர் |
| 14. சீறாப்புராணம் | - | சாலை. இளந்திரையன் |
| 15. பூத்தது மானுடம் | - | உமறுப்புலவர் |
| 16. தேவாரம் | - | நல்லந்துவனார் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க** **4 × 1 = 4**

17. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
18. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
19. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் பெரியார்.
20. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** **5 × 1 = 5**

01. பின்வருவனவற்றுள் தொடர் மொழி
அ. அந்தமான ஆ. மண் இ. படம் பார்த்தான் ஈ. கண்

02. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடரை எடுத்து எழுதுக.
அ. சென்று கேட்டான் ஆ. படித்த கயல்விழி இ. ஆடினான் பாடினான் ஈ. கோதை சென்றாள்

03. பாலை நிலத்திற்குரிய பறவைகள்
அ. கடற்காகம், கிளி ஆ. கிளி, மயில் இ. புறா, பருந்து ஈ. நாரை, அன்னம்

04. கீழ்வருவனவற்றுள் இனங்குறித்தல் சொல்லைத் தேர்ந்தெழுதுக
அ. விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்தான் ஆ. பச்சை பசேல் என்ற வயல்
இ. இரவு பகல் பாராது உழைத்தான் ஈ. கதிர்வேல் வெற்றிலை தின்றான்

05. நல்லவை - இச்சொல்லை அலகிட்டால் .............. எனப் பிரியும்
அ. நேர் நேர் ஆ. நிரைநேர் இ. நேர்நிரை ஈ. நிரைநிரை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** **5 × 1 = 5**

06. 'வெளவால்' - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ......................................
07. 'கிளி போல பேசினாள்' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு .................
08. 'மாலை' - என்பது ...................... திணைக்குரிய சிறுபொழுது
09. 'ஆடத் தெரியுமா?' என்ற வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது ....... விடை
10. 'மரவடி' - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி .........................................

**இ. சுருக்கமாக விடையளி** **10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. உருவகத்தை உவமையாக மாற்றுக - ***முகமதி***
13. வினாத் தொடராக மாற்றி அமைக்க: ***திருக்குறளை அனைவரும் அறிவர்***
14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***பெண்கள் பெற வேண்டியது பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை***
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்***
16. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. ***இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.***
17. தொகைச் சொல்லை விரித்து எழுதுக - ***ஐந்திணை***
18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
***அம்பத்கர் ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றார்***
19. உவமையைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. ***பசுமரத்தாணி போல***
20. மரபுத் தொடருக்கேற்ற பொருளை எழுதுக. ***இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – ஜூன் 2012

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. கைதான் நெகிழ விடேன். இதில் நெகிழ என்பது .... என்னும் பொருளில் வந்துள்ளது.
அ. தலர ஆ. தளர இ. தழர

02. கண்ணகியின் காற்சிலம்பில் உள்ள பரல்கள்
அ. முத்து ஆ. பவளம் இ. மாணிக்கம்

03. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்
அ. அகநானூறு ஆ. நற்றிணை இ. கலித்தொகை

04. பண்ணொடு தமிழொப்பாய் - எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல்
அ. திருவாசகம் ஆ. திருக்குறள் இ. தேவாரம்

05. உலகம் என்ற தமிழ்ச்சொல் ........... என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது
அ. உலகு ஆ. உலவு இ. உளது

06. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று ............... இல்லாமை
அ. வாக்குரிமை ஆ. பேச்சுரிமை இ. சொத்துரிமை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. சேக்கிழார் பெருமான் அருளியது ..........................................................................
08. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் ......................................................
09. அறனீனும் இன்பமும் ஈனும் ......................................... தீதின்றி வந்த பொருள்.
10. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் - எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்....
11. நாள்தோறும் கல்வியில் ......................................... உருவாகிக் கொண்டிருக்கிறது.
12. படப்பிடிப்புக் கருவியை ............................................... பொருத்துவதும் உண்டு .

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. உழுவை - துன்பம்
14. செறிவு - ஓய்வெடுத்தல்
15. இடர் - புலி
16. இளைப்பாறுதல் - கூறியது மறாஅமை

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்
18. ஆசிரியர் என்பவர் அறிவுக்கடலாக மட்டுமின்றி அறத்தின் ஆழியாகவும் விளங்க வேண்டும்.
19. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் போன்றவை
20. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக
அ. படிக்கிறான் ஆ. படிப்பான் இ. படிக்கின்றான் ஈ. படித்தான்

02. தனிமொழியைத் தேர்ந்தெழுதுக
அ. கண் ஆ. படம்பார்த்தான் இ. அந்தமான் ஈ. வைகை

03. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது ............ ஐக் குறிக்கும்
அ. பசு ஆ. காளை இ. கன்று ஈ. எருது

04. ஒரு பொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக
அ. செய்வினை ஆ. வயிறு வலிக்கும் இ. புன்கண் ஈ. நடுமையம்

05. வடக்கு + கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக
அ. பண்புப் பெயர்ப் புணர்ச்சி ஆ. இயல்புப் புணர்ச்சி ஆ. மகர ஈற்றுப் புணர்ச்சி ஈ. திசைப் பெயர்ப் புணர்ச்சி

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. ஓர் எச்சவினை பெயரைக் கொண்டு முடிந்தால் அது ......................... எனப்படும்.
07. ‘இது செய்வாயா?’ என்ற வினாவிற்கு ‘நீயே செய்’ என்று கூறுவது ........... விடை
08. ‘மாலை’ இச்சிறுபொழுது .................................................... திணைக்குரியது.
09. ‘தேன் போன்ற மொழி’ - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு .................
10. ‘முஃடீது’ - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் .......................................

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. தொகைச் சொல்லை விரித்து எழுதுக - ***முத்தமிழ்***
13. இளமைப் பெயர்களைப் பொருத்துக. ஆடு - கன்று
சிங்கம் - குட்டி
- குருளை
14. ***வேல்விழி திருக்குறள் படித்தாள்*** - உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***இன்று பேருந்துகள்ஓடாது***
16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்***
17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. ***நான் இந்த காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்***
18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக. :
***வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே***
19. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
***தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன***
20. ‘வாழையடி வாழையாக’ - இந்த மரபுத் தொடருக்குப் பொருளைத் தேர்ந்தெழுதுக
அ. பயிர்த்தொழில் ஆ. வாழைப் பயிரிடுதல் இ. பரம்பரை பரம்பரையாக ஈ. பயனின்றி இருத்தல்

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – அக்டோபர் 2012

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர்
அ. பாரதிதாசன் ஆ. கவிமணி இ. பாரதியார்

02. தேசமுய்ய வந்தவரை திருவமுது செய்விக்கும்
நேசமுற விண்ணப்பம் செய அவரும் அது நேர்ந்தார் - இப்பாடலடிகளில் அமைந்த தொடை
அ. மோனை ஆ. எதுகை இ. இயைபு

03. சரசுவதி அந்தாதி ........................ இயற்றிய நூல்களுள் ஒன்று
அ. கம்பர் ஆ. ஒட்டக்கூத்தர் இ. புகழேந்தி

04. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது
அ. பாரத ரத்னா ஆ. பத்ம விபூஷண் இ. பத்மஸ்ரீ

05. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல்
அ. நன்னூல் ஆ. பகவத் கீதை இ. பைபிள்

06. இன்றைய மதுரையில் ........................ தமிழ்ச் சங்கம் இருந்தது
அ. மூன்றாம் ஆ. இரண்டாம் இ. முதலாம்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. பாரதிதாசனார் .................................................. என்று அழைக்கப்படுகிறார்.
08. புறநானூறு .................................................................. நூல்களுள் ஒன்று
09. மனம், புத்தி, சித்தி, .................................................. என்பன நாற்கரணங்கள்
10. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர் ..........................................................
11. திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் .................. என்னும் பொருளால் ஆனது
12. பெரியார் சமூக ...................... எதிர்த்தவர்; மூடக் கருத்துகளை ........................

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. சாலை. இளந்திரையன் - கலித்தொகை
14. திருநாவுக்கரசர் - சீறாப்புராணம்
15. நல்லந்துவனார் - பூத்தது மானிடம்
16. உமறுப்புலவர் - தேவாரம்

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்
18. வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்
19. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.
20. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் திருவள்ளுவர்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. 'தலைவன்' - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம்
அ. ஔகாரக் குறுக்கம் ஆ. ஐகாரக் குறுக்கம் இ. ஆய்தக் குறுக்கம் ஈ. மகரக் குறுக்கம்

02. 'இது செய்வாயா?' என்ற வினாவிற்கு 'வயிறு வலிக்கும்' என்று கூறுவது .... விடை
அ. இனமொழி ஆ. உற்றது உரைத்தல் இ. உறுவது கூறல் ஈ. ஏவல்

03. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சம் பயின்று வந்துள்ள சொற்றொடர்
அ. அவன் நல்லவன் ஆ. சென்ற கோதை இ. படித்து வந்தான் ஈ. படம் பார்த்தான்

04. கீழ்வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக
அ. வேங்கை ஆ. மாந்தர் இ. கண் ஈ. நாடு

05. ஒருபொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக
அ. கண்ணுங்கருத்துமாய்ப் பயின்றான் ஆ. அரைகுறையாகச் செய்தல் கூடாது
இ. குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகிறது. ஈ. நேர்மாறாக நடக்காதே

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. 'படித்து வந்தான்' - இதில் படித்து என்பது ..................................................
07. 'முழவு உறழ் தடக்கை' இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ..................
08. 'இந்திரன்' ........................................................ நிலத்திற்குரிய தெய்வம்
09. 'செம்மொழி' .......................................................... புணர்ச்சி ஆகும்
10. 'நிரை கவர்தல்' ............................................ என்னும் புறத்திணைக்குரியது

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.
13. உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெழுதுக.
பாரதியார் செய்யுளை ................ (இயற்றினார் / பாடினார்)
14. இரு பொருள் தருக: ***நகை***
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***அறிவு ஒளி பெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்***
16. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.***
17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எழுது
***வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.***
18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
***எண்ணெ வெல அதிகமாகி விட்டது***
19. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
***தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன***
20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக. ***இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – மார்ச் 2013

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 6 × 1 = 6

01. மாணிக்கவாசகர் பிறந்த ஊர்
அ. திருப்பெருந்துறை ஆ. திருவாதவூர் இ. திருநின்றவூர்

02. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ. சோழ நாடு ஆ. சேர நாடு இ. பாண்டிய நாடு

03. நற்றிணையை தொகுப்பித்தவர்
அ. பன்னாடு தந்த மாறன் வழுதி ஆ. உக்கிரப்பெரு வழுதி இ. இளம்பெரு வழுதி

04. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று
அ. வாக்குரிமை இல்லாமை ஆ. சொத்துரிமை இல்லாமை இ. பேச்சுரிமை இல்லாமை

05. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்
அ. திருவாசகம் ஆ. திருக்குறள் இ. தேவாரம்

06. 'உறுமிடத் துதவா உவர் நிலம்' என்னும் வரிகள் இடம்பெறும் நூல்
அ. புறநானூறு ஆ. அகநானூறு இ. கலித்தொகை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 6 × 1 = 6

07. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் ...............

08. இடிப்பாரை இல்லாத ......................... மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

09. சீறாப்புராணத்தை இயற்றியவர் .....................

10. தமிழ் மிகவும் பண்பட்ட மொழி எனக் கூறிய மொழியியல் அறிஞர் .......................

11. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை .....................................

12. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் ..................................................

**இ. பொருத்துக** 4 × 1 = 4

13. நாளிகேரம் - குடை
14. நாவாய் - ஓய்வெடுத்தல்
15. கவிகை - படகு
16. இளைப்பாறுதல் - தென்னை

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க** 4 × 1 = 4

17. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவம் ஆகும்.

18. காந்தியடிகள்,பகவத்கீதையைப் படித்ததன் மூலம் மன உறுதியைப் பெற்றார்.

19. எல்லா உயிர்களையும் தம்முயிராய்க் கருதித் தொண்டு செய்பவர் உள்ளத்தில்தான் இறைவன் நடம் புரிவார்.

20. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சியாகும்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக** 5 × 1 = 5

01. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ. வருவான் ஆ. கண்டான் இ. படிக்கின்றான் ஈ. செல்கிறான்

02. இளவழகன் வந்தான். இது ................. தொடர்
அ. குறிப்பு ஆ. வெளிப்படை இ. இனங்குறித்தல் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

03. புறத்திணைகள் ........... வகைப்படும்
அ. ஐந்து ஆ. ஏழு இ. பன்னிரண்டு ஈ. பத்து

04. வடக்கு + கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக.
அ. பண்புப் பெயர்ப் புணர்ச்சி ஆ. இயல்புப் புணர்ச்சி
இ. மகரஈற்றுப் புணர்ச்சி ஈ. திசைப்பெயர்ப் புணர்ச்சி

05. நல்லவை - இச்சொல்லை அலகிட்டால் ........... எனப் பிரியும்
அ. நேர்நேர் ஆ. நிரைநேர் இ. நேர்நிரை ஈ. நிரைநிரை

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக** 5 × 1 = 5

06. மாலை என்பது ................................................ திணைக்குரிய சிறுபொழுது

07. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது ................................ அணி

08. விடை ........................................................................ வகைப்படும்

09. மலரன்ன சேவடி - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ...........................

10. முஃடீது - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் .........................................

**இ. சுருக்கமாக விடையளி** 10 × 1 = 10

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. ***படி*** - இச்சொல்லை வினையெச்சமாக்குக.

13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக - ***நானிலம்***

14. ***கிளி கல்லால் அடிபட்டது*** - உணர்ச்சித் தொடராக மாற்றுக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***இன்று பேருந்துகள் ஓடாது***

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்***

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
***வலது பக்கச் சுவற்றில் எழுதாதே***

18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. ***இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்***

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
ஓட்டுநர் நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக. ***முதலைக்கண்ணீர்***

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – ஜூன் 2013

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. இளங்கோவடிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
    அ. சோழ நாடு ஆ. சேர நாடு இ. பாண்டிய நாடு
02. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பாடல் ................ 'அச்சமில்லை அச்சமில்லை' எனப் பாடத் தூண்டியது.
    அ. பாரதிதாசனை ஆ. சுரதாவை இ. பாரதியாரை
03. 'நல்' என்னும் அடைமொழி பெற்ற நூல் ..........
    அ. அகநானூறு ஆ. கலித்தொகை இ. நற்றிணை
04. தமிழர் மனித வாழ்வை ..........., ................... எனப் பிரித்தனர்
    அ. மேடு, பள்ளம் ஆ. அகம், புறம் இ. உயர்வு, தாழ்வு
05. தமிழர்கள் நிலத்தை ............... வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்
    அ. மூன்று ஆ. ஆறு இ. ஐந்து
06. 'விரல்கள் பத்தும் மூலதனம்' என்னும் பாடலின் ஆசிரியர்
    அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. தாராபாரதி

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. சேக்கிழார் பெருமான் அருளியது .............................................................................
08. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் ................................... போன்றிருந்தேனே.
09. குடும்ப விளக்கு ........................................................... படைப்புகளுள் ஒன்று.
10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ..................................................
11. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ...................................................... இருக்கும்.
12. இலெமூரியாவை ........................................................................................ என்பர்.

**இ. பொருத்துக 4 × 1 = 4**

| | | |
|---|---|---|
| 13. சீறாப்புராணம் | - | துன்பம் |
| 14. பூத்தது மானுடம் | - | நிலவு |
| 15. இடர் | - | சாலை. இளந்திரையன் |
| 16. இந்து | - | உமறுப்புலவர் |

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
18. மேடைப்பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
19. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
20. இராமலிங்கர் சத்தியதருமச்சாலையை நிறுவிய இடம் வடலூர்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல்
    அ. திண்ணை ஆ. வளையல் இ. மையம் ஈ. ஐந்து
02. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது .................. ஐக் குறிக்கும்
    அ. பசு ஆ. காளை இ. கன்று ஈ. எருது
03. பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக
    அ. படம் பார்த்தான் ஆ. கண் இ. கடல் ஈ. தாமரை
04. ஒரு பொருட்பன்மொழிக்குச் சான்று
    அ. உயர்ந்தோங்கிய ஆ. செய்வேன் இ. புன்கண் ஈ. கை வலிக்கும்
05. குறிஞ்சி நிலத்திற்குரிய பறவைகள்
    அ. கடற்காகம், கிளி ஆ. கிளி, மயில் இ. புறா, பருந்து ஈ. நாரை, அன்னம்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. வெண்பாவின் ஓசை.......................................................................................
07. கிளி போல பேசினாள் - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு..........................
08. அணி என்னும் சொல்லுக்கு .................................................. என்பது பொருள்
09. நிரை கவர்தல் என்பது ............................................................................. திணை
10. செம்மொழி - இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி ...........................................

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. உருவகத்தை உவமையாக மாற்றுக - ***பாதமலர்***
13. தொகைச் சொல்லை விரித்து எழுதுக - ***முக்கனி***
14. ***திருக்குறளை அனைவரும் அறிவர்*** - எவ்வகை வாக்கியம்?
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
    ***ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.***
16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
    ***ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.***
17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
    ***இன்னக்கி ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்***
18. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. ***இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.***
19. உவமையைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. ***பசுமரத்தாணி போல***
20. இளமைப் பெயர்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| கீரி | - | குஞ்சு |
| கோழி | - | கன்று |
| | - | பிள்ளை |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – ஒரு மதிப்பெண்கள் – சிறுதேர்வு
## பொதுத் தேர்வு – அக்டோபர் 2013

### தமிழ் முதல் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 6 × 1 = 6**

01. ................................ நூல்களுள் ஒன்று புறநானூறு
அ. பதினெண்கீழ்க்கணக்கு ஆ. எட்டுத்தொகை இ. பத்துப்பாட்டு

02. முதலிலார்க்கு ............................இல்லை
அ. ஊதியம் ஆ. நட்பு இ. பகை

03. கம்பராமாயணம் ........................... காண்டங்களைக் கொண்டது
அ. ஐந்து ஆ. ஆறு இ. மூன்று

04. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்று கூறியவர்.................
அ. திரு.வி.க. ஆ. பெரியார் இ. பாரதிதாசன்

05. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் ........................................
அ. பகவத் கீதை ஆ. நன்னூல் இ. பைபிள்

06. வள்ளலாரின் இயற்பெயர்............................
அ. இராமலிங்கர் ஆ. தாயுமானவர் இ. சம்பந்தர்

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 6 × 1 = 6**

07. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் .............................. குலசேகரர் பாடியதாகும்
08. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோன்றக் காரணமானவர் ..........................
09. போலிப் புலவர்களின் செவியை அறுப்பவர் ......................................................
10. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது ..............................................
11. கல்வி கற்பிப்பதற்கென உருவாக்கப்படும் படங்கள் ..........................................
12. ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ என்பார்..........................................

**இ. பொருத்துக 4 × 1 = 4**

13. தேவாரம் - கணிமேதாவியார்
14. சிலப்பதிகாரம் - சேக்கிழார்
15. பெரியபுராணம் - இளங்கோவடிகள்
16. ஏலாதி - திருநாவுக்கரசர்

**ஈ. விடைக்கேற்ற வினா அமைக்க 4 × 1 = 4**

17. தொடக்கம், இடைப்பகுதி, முடிவு என்பன பேச்சின் முக்கூறுகள்
18. உலக இலக்கியங்களுள் முதன்மைப் பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்
19. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்
20. இடைநிலை ஆசிரியர் பயிற்சி ஈராண்டுகள் ஆகும்.

### தமிழ் இரண்டாம் தாள்

**அ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக 5 × 1 = 5**

01. வரும் வண்டி - இச்சொற்களில் வரும் குறுக்கம்?
அ. ஔகாரக்குறுக்கம் ஆ. மகரக்குறுக்கம் இ. ஐகாரக்குறுக்கம்

02. ‘கலா கலகலவெனச் சிரித்தாள்’ - இதில் கல கல என்பது ..................
அ. அடுக்குத் தொடர் ஆ. இனங்குறித்தல் இ. இரட்டைக்கிளவி

03. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது
அ. நிலைமொழி ஈறு நீங்கும் ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
இ. வருமொழி முதல் கெடும்

04. அகப்பொருள் திணைகள்
அ. ஏழு ஆ. ஐந்து இ. பன்னிரண்டு

05. சிறப்பு என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு
அ. நாள் ஆ. காசு இ. பிறப்பு

**ஆ. கோடிட்ட இடத்தை சரியான விடை கொண்டு நிரப்புக 5 × 1 = 5**

06. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறும் வெளிப்படையாக உணர்த்துவது..................................
07. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ............................................ திணை
08. தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்வதற்காக கேட்கும் வினா ................
09. ‘முழவு உறழ் தடக்கை’ - இதில் அமைந்துள்ள உவம உருபு .............................
10. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் .............. அணியாகும்.

**இ. சுருக்கமாக விடையளி 10 × 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.
12. *பிரி* - இவ்வினைப் பகுதியைப் பெயரெச்சமாக்குக.
13. நேற்று மாலை புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன. - எவ்வகை வாக்கியம்?
14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.
***மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா***
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
***மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.***
16. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக. ***எல்லா ஸ்டூடன்சும் பஸ்ஸில் ஏறி ஸ்கூலுக்குச் சென்றார்கள்***
17. தொகைச் சொல்லை விரித்து எழுதுக. ***மூவிடம்***
18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
***கதவைத் தாப்பாள் போட மறந்துட்டேன்***
19. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக. ***அத்தி பூத்தாற் போல***
20. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
***தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன***

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 1 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. திருவள்ளுவமாலை 02. அ. பாரதிதாசன் 03. இ. ஜி.யு. போப்
04. ஆ. திரிகடுகம், ஏலாதி 05. இ. புறநானூறு 06. இ. திருக்குறள்
07. கணிமேதாவியார் 08. (81) எண்பத்தொன்று 09. எட்டாம்
10. திருக்குறள் 11. மூன்றாம் 12. மாக்சுமுல்லர்
13. என்றுமுள தென்தமிழ் - கம்பர்
14. சங்க இலக்கியம் - மக்கள் இலக்கியம்
15. உலகப் பொதுமறை - திருக்குறள்
16. இடும்பை - துன்பம்
17. சங்க இலக்கியங்கள் எவற்றைக் கடந்தவை?
18. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது எது?.
19. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்வது எது?
20. நடுவணரசு எப்போது தமிழைச் செம்மொழியாக அறிவித்தது?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. திண்ணை 02. பஃறீது 03. அ. ஔகாரம்
04. ஆ. எதிர்மறைத் தொடர் 05. இ. தன்வினைத் தொடர்
06. மகரக்குறுக்கம் 07. ஒரு 08. கால்
09. ஆய்தக் 10. கற்பித்தான்
11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. தீ + பெட்டி = தீப்பெட்டி
12. எதிர்மறைத் தொடர் 13. முப்பால் - அறம், பொருள், இன்பம்
14. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ள**வை** சங்க இலக்கியங்கள்
15. தமிழ்**ச்**சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் என**ப்** பிரித்து வளமடைய**ச்** செய்தனர்
16. அவர்களிருவருக்கும் இடையே **உரையாடல்** நடைபெற்றது
17. விழிக்கயல் - கயல்விழி
18. என்னே! இமயமலையின் உயரம்
19. ‘இன்றைய மொழியியல் அறிஞர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது’ என்பார் முனைவர் எமினோ.
20. அருவினை - பண்புத்தொகை

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 2 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. அரசுப்பணி 02. இ. சீத்தலைச் சாத்தனார் 03. அ. சிலப்பதிகாரம்
04. ஆ. பாரதிதாசன் 05. ஆ. சுப்புரத்தினம் 06. இ. சொத்துரிமை
07. மணிமேகலையும் 08. சேரன் செங்குட்டுவன் 09. புரட்சிக் கவிஞர்
10. திருச்சிராப்பள்ளி 11. மூடக்கருத்துக்களையும் 12. பெரியார்
13. யாரையோ நீ மடக்கொடி - பாண்டிய மன்னன்
14. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே - கண்ணகி
15. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்லை - கோப்பெருந்தேவி
16. வாழியெம் கொற்கை வேந்தே வாழி - வாயிற்காவலன்
17. பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?
18. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் யார்? .
19. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பது யாருடைய வாக்கு?
20. பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் எத்தனை வகைப்படும்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. இ. பொதுமொழி 02. ஆ. படித்து 03. இ. முற்றெச்சம்
04. அ. நிலங்கடந்தான் 05. ஆ. குறிப்புப் பெயரெச்சம்
06. குறிப்பு வினையெச்சத்திற்கு 07. தெரிநிலை, குறிப்பு
08. தனிமொழி 09. பெயரைக் 10. வினைச்சொல்
11. வினைத்தொகையில் வரும் வல்லினம் (க்,ச்,ப்,த்) மிகாது.
எ.கா. விடு + கணை = விடுகணை
12. எழுதி
13. ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்
14. பெண்கள் பெற வேண்டிய**வை** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
15. அனைத்து**த்** துறைகளிலும் ஆண்களை**ப்** போலவே பெண்களுக்கும் அரசு**ப்** பணி கொடுக்க வேண்டும்.
16. அவன் வீண் **செலவு** செய்கிறான் 17. இந்த சட்டை மிகவும் விலை உயர்ந்தது
18. ‘ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்’ என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார்.
19. வாழையடி வாழையாக - பரம்பரை பரம்பரையாக
20. ஆசிரியர் கற்பித்த இலக்கணம் என் மனதில் பசுமரத்தாணி போல பதிந்தது

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 3 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. இ. சடையப்ப வள்ளல் 02. ஆ. பாரத ரத்னா 03. அ. சரசுவதி அந்தாதி
04. இ. ஆறு 05. அ. பொருளியல் 06. இ. பெரியார்
07. வான்மீகி 08. இராமாவதாரம் 09. கி.பி. பன்னிரண்டாம்
10. பீமாராவ் ராம்ஜி 11. அம்பேத்கர் 12. சமத்துவம்
13. இடர் - துன்பம்
14. நாவாய் - படகு
15. இறை - தலைவன்
16. இந்து - நிலவு
17. ஆசிரியர் என்பவர் எவ்வாறு விளங்க வேண்டும்?
18. மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தவர் யார்?
19. அம்பேத்கர் எங்கு தன்னுடைய உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்தார்?
20. அம்பேத்கர் ஒரு நாளில் கல்வி கற்பதற்காக எவ்வளவு நேரத்தை செலவழித்தார்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. வெளிப்படை 02. அ. பசு 03. ஆ. அஃறிணைப் பொதுப் பெயர்
04. அ. இனங்குறித்தல் 05. இ. இன்பத்தை
06. இரட்டைக்கிளவி 07. குறிப்பு 08. பெண்
09. அச்சம் 10. இனங்குறித்தல்
11. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. எ.கா. விடு + கணை = விடுகணை
12. சென்ற
13. அறுசுவை - இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு
14. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்த**ன**.
15. ஏழைகளுக்கு**ப்** பொருள் பெறாமல் வாதாடி நீதி**ப்** பெற்று**த்** தந்தார்
16. **எனக்கு** திருக்குறளில் ஆர்வம் மிகுதி
17. முகமதி - மதிமுகம்
18. உணர்ச்சித் தொடர்
19. பயனின்றி இருத்தல்
20. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த வல்லுநர்

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 4 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. நற்றிணை 02. இ. கண்ணகனார் 03. இ. பேச்சுக்கலை
04. இ. நற்றிணை 05. இ. திரு.வி.க. 06. அ. பன்னாடு தந்த மாறன் வழுதி
07. நானூறு 08. நெற்கதிர் 09. பன்னிரண்டு அடிப்
10. பேச்சின் சுருக்கத்தினைக் 11. மேடைப் 12. கருத்துகளே
13. செறு - வயல்
14. வித்து - விதை
15. யாணர் - புதுவருவாய்
16. வட்டி - பனையோலைப்பெட்டி
17. மேடைப்பேச்சினை எவ்வாறு தொடங்குதல் வேண்டும்?
18. பேச்சின் முக்கூறுகள் யாவை?
19. இலக்கியக் கூறுகள் என்பவை எதைப் போன்றவை?
20. தொடுத்தல் என்றால் என்ன?

### தமிழ் இரண்டாம் தாள்

01. ஆ. ஒரு பொருட் பன்மொழி 02. ஆ. ஏவல் விடை
03. இ. உறுவது கூறல் விடை 04. இ. ஐயவினா 05. அ. எட்டு
06. ஒருபொருட் பன்மொழி 07. கொளல் 08. உறுவது கூறல்
09. இனமொழி 10. ஆறு
11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. தீ + பெட்டி = தீப்பெட்டி
12. வந்து 13. நாற்றிசை - வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு
14. மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி போன்ற**வை**
15. மேடை**ப்** பேச்சு மிகுந்த பயனை**த்** தரவல்லது.
16. தாயை இழந்த குழந்தை மழை காணாப் பயிர் போல வாடியது
17. பாதமலர் - மலர்ப்பாதம்
18. நான் இந்த கல்லூரியின் முன்னாள் மாணவன்
19. செய்தித் தொடர்
20. கீரி - பிள்ளை
கோழி - குஞ்சு

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 5 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. பெரியபுராணம் 02. இ. மீனாட்சிசுந்தரனார் 03. ஆ. அப்பூதியடிகளார்
04. ஆ. வால்ட் டிஸ்னி 05. இ. விளக்கப்படம் 06. அ. செல்லுலாய்டு
07. திருத்தொண்டர் புராணம் 08. பன்னிரண்டாம் 09. எருமை
10. வேடிக்கையாக 11. நகர்த்தும் வண்டியில் 12. இயக்குனர்
13. ஈஸ்ட்மன் - படச்சுருள்
14. எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
15. எட்வர்டு மைபிரிட்சு - இயக்கப்படம்
16. வால்ட் டிஸ்னி - கருத்துப்படம்
17. எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?
18. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகிறது?
19. எவற்றை தம் இரு கண்களாக எம்.ஜி.ஆர். கருதினார்?
20. திரைப்படம் எடுப்பதனை விட எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. தேன் 02. அ. பவளவாய் 03. ஆ. அன்ன
04. ஆ. வாய் 05. அ. உறழ
06. உவமை 07. போல் அல்லது போல 08. உருவகம்
09. ஒப்ப 10. தொகையுவமை
11. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. எ.கா. விடு + கணை = விடுகணை
12. கண்கயல் 13. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
14. இயங்குருப்படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்ற**ன**
15. திரை**ப்**படம் மக்களை**த்** தன்பால் ஈர்த்து**க்**கட்டி**ப்** போடவல்லது.
16. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பதெற்கு என்று சொன்ன காலம் மலையேறிவிட்டது
17. வேல்விழி திருக்குற**ளைப்** படித்தாள் 18. மெய் - உண்மை, உடல்
19. கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.
20. சிங்கம் - குருளை

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 6 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. அ. பிள்ளைப்பாண்டியன் 02. இ. தென்னை 03. ஆ. தொண்ணூற்றாறு
04. ஆ. திருவாசகம் 05. ஆ. மயில்தோகை 06. இ. தேவாரம்
07. மனித 08. தனியினம் 09. திருக்குறள்
10. வில்லிப்புத்தூரார் 11. வரப்புகளாக 12. போலிப்புலவர் அல்லது கீழானவர்
13. தமிழ்கெழு கூடல் - புறநானூறு
14. நீரின் வந்த நிமிர்பரிப் புரவி - பட்டினப்பாலை
15. கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் - திருவாசகம்
16. குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள - சிலப்பதிகாரம்
17. தமிழர்கள் எந்தெந்த நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
18. கல்வியின் முடிவு யாது?
19. எதன் அடிப்படையில் தொடங்கியது பழந்தமிழர் வாழ்வு?
20. பழந்தமிழகத்தில் யார் உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. இ. மேனாடு 02. இ. ஈறுபோதல், இனமிகல்
03. ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் 04. ஆ. மகர ஈற்றுப் புணர்ச்சி
05. ஆ. பைங்கூழ் 06. பண்புப் பெயர் புணர்ச்சி 07. சேதாம்பல்
08. கீழ்நாடு 09. விகாரப்புணர்ச்சி 10. ஈறுபோதல்
11. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. எ.கா. விடு + கணை = விடுகணை
12. மலரடி
13. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்த**து**
14. மனித இனத்தின் மரபு**ச்** செல்வமாக**த்** தமிழ்மொழி விளங்குகிறது.
15. கோயில்கள் தோறும் சென்று தெய்வத்திருவுருவங்களை வழிபடுக.
16. வேல்விழி திருக்குற**ளை**க் கற்றாள்
17. ஆற்றங்கரை அருகாமையில் நாகரிகம் தோன்றியது
18. மாலை - மலர்மாலை, மாலைப்பொழுது
19. எண்ணித் துணியாதார்
20மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 7 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. கி.பி. 7 02. ஆ. பெரியார் 03. இ. செல்வம்
04. ஆ. மருணீக்கியார் 05. ஆ. தொங்குதல் 06. ஆ. திருமூலர்
07. ஐந்து 08. உலவு 09. திலகவதியார்
10. திருநாவுக்கரசர் 11. எல்லாரும் 12. திறனறிந்து
13. நாமார்க்கும் குடியல்லோம் - திருநாவுக்கரசர்
14. அச்சமில்லை அச்சமில்லை - பாரதியார்
15. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி - ஔவையார்
16. அறிவு அற்றம் காக்கும் கருவி - திருவள்ளுவர்
17. பரந்துபட்ட அறிவியல் சிந்தனை உடையவர்கள் யார்?
18. சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்த செய்தியை எடுத்துரைப்பது எது?
19. சித்தமருத்துவம் என்றால் என்ன?
20. மழையை அமிழ்தம் என்றவர்யார்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. இரண்டு 02. இ. ஏழு 03. இ. இளவேனில்
04. இ. இந்திரன் 05. புறா, பருந்து 06. முல்லை
07. இரவு 2 மணி 08. மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல்
09. மருதத் 00. ஆறு
11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லின் மிகும். தீ + பெட்டி = தீப்பெட்டி
12. தமிழர்கள் நிலத்தினை ஐந்து வகையாகப் **பிரித்து** வாழ்ந்திருக்கிறார்கள்
13. தமிழ் இலக்கியங்கள் தமிழர்தம் வாழ்வை எதிரொலிப்ப**ன**
14. தமிழில் வரலாற்று**க்** கருத்துகளையும், பண்பாட்டு**க்** கூறுகளையும் காண முடியும்
15. தந்தையை இழந்த குடும்பம் அடியற்ற மரம் போல ஆனது
16. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
17. வியர்வை சிந்த உழைக்க வேண்டும்
18. அன்பரசன் திருக்குறள் கற்பித்தான்
19. ஆறு - நதி, எண், வழிநடத்து
20. நற்சங்கு - பண்புத் தொகை
செல்வச்செவிலி - உருவகம்

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 8 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. மூன்று 02. அ. பன்றி 03. ஆ. முதுமொழிமாலை
04. ஆ. சர்ச்சில் 05. அ. பைபிள் 06. ஆ. எளிமை, சிக்கனம்
07. சிரவணபிதுர்பத்தி 08. தால்சுதாய் 09. உமறுப்புலவர்
10. பகவத்கீதை 11. சிங்கம் 12. சீதக்காதி /அபுல்காசிம்
13. கான் - காடு
14. உழுவை - புலி
15. மடங்கல் - சிங்கம்
16. எண்கு - கரடி
17. காந்தியடிகள் எதைக் கதர் என்று கருதினார்?
18. கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?
19. அறப்போராட்டங்கள் யாவை?
20. யாருடைய கொள்கைகள் உலகை வழி நடத்திச் செல்கின்றன?

### தமிழ் இரண்டாம் தாள்

01. இ. பன்னிரண்டு 02. ஆ. வெட்சித்திணை 03. அ. வஞ்சித்திணை
04. இ. கைக்கிளை 05. இ. காஞ்சித்திணை 06. ஆண்மகனின் ஒழுகலாறுகள்
07. உலகியல் 08. நொச்சித் 09. பொருந்தாக் காமம்
10. கரந்தைத்
11. வினைத்தொகையில் வல்லினம் மிகாது. எ.கா. விடு + கணை = விடுகணை
12. வினாத்தொடர்
13. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தா**ள் / ர்**
14. அறவழியை**ப்** பின்பற்றி**ப்** பெறுகிற விடுதலையே நிலைக்கும் என அவர் எடுத்து**க்** கூறினார்
15. இல்லாத ஒன்று 16. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி
17. "நான் மொழியால் குஜராத்தியன்; நாட்டால் இந்தியன்; உலக நிலையில் உலகன்; ஆனால், மனிதனாக இருத்தல் வேண்டும்"
18. எல்லா மாணவர்களும் பேருந்தில் ஏறி பள்ளிக்கூடத்திற்குச் சென்றார்கள்
19. நகை - சிரிப்பு, அணிகலன்
20. புகுக - வியங்கோள் வினைமுற்று
செங்கதிர் - பண்புத்தொகை

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 9 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. இராமலிங்கர் 02. இ. மூங்கில் 03. இ. நல்லந்துவனார்

04. ஆ. நூற்றைந்து 05. அ. இராமலிங்கர் 06. ஆ. எட்டுத்தொகை

07. இறவாத நிலை 08. வடலூர் 09. குடை

10. பெருமாள் திருமொழி 11. நந்திக்கலம்பகம் 12. 1874

13. திருவருட்பா - இராமலிங்கர்

14. பெருமாள் திருமொழி - குலசேகர ஆழ்வார்

15. கலித்தொகை - நல்லந்துவனார்

16. நந்திக்கலம்பகம் - நந்திவர்மன்

17. எந்த நூற்றாண்டு தமிழின் மறுமலர்ச்சிக்காலம் என அழைக்கப்படுகிறது?

18. இராமலிங்கர் எந்த வயதிலேயே பாடல் புனையும் திறன் பெற்றிருந்தார்?

19. உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்றவர் யார்?

20. இராமலிங்கரை புதுநெறி கண்ட புலவர் எனப் போற்றியவர் யார்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. நான்கு 02. ஆ. நான்கு 03. இ. நேர் நிரை

04. ஆ. ஏகாரத்தில் 05. ஆ. பிறப்பு 06. ஆறு

07. அகவற்பா 08. அகவலோசை 09. இன்னிசை வெண்பா

10. செப்பலோசை

11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லின் மிகும். தீ + பெட்டி = தீப்பெட்டி

12. குதிரை கனைக்கும்

13. வடலூர் சத்தியதருமச்சாலை இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்ற**து**.

14. வள்ளலார் அருளிய வழிகளை**க்** கடை**ப்**பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்

15. மாறன் ஓவியத்தைப் **புனைந்தான்**

16. ***மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை***

17. இராமலிங்கர் அவ்வழியே சென்றபோது, 'இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்' என்று கூறினார் திகம்பர சாமியார்.

18. வேலன் **தன்சொந்தத் தொழிலில் மிகுந்த வருவாய்** ஈட்டினான்

19. மதி - அறிவு, சந்திரன்

20. பொருத்துக: மயில் - அகவும்

கூகை - குழறும்

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் சிறு தேர்வு – இயல் – 10 விடைகள்

### தமிழ் முதல் தாள்

01. ஆ. பூத்தது மானுடம் 02. ஆ. பன்னிரண்டாம் வகுப்பு 03. இ. தாராபாரதி

04. அ. உரைவீச்சு 05. அ. பட்டப்படிப்பு 06. இ. குப்பைகூளம்

07. சாலை. இளந்திரையன் 08. பாவேந்தர் 09. கடல்

10. புதுப்புதுத் துறைகள் 11. எழுத்துத் 12. இருபது

13. வினையே ஆடவர்க்குயிர் - குறுந்தொகை

14. முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை - தொல்காப்பியர்

15. உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே - திருமூலர்

16. விரல்கள் பத்தும் மூலதனம் - தாராபாரதி

17. எதில் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?

18. பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர தகுதிகள் என்ன?

19. சிறந்த வேலைவாய்ப்புத் துறையாக எது விளங்கி வருகிறது?

20. போட்டித் தேர்வுகளை நடத்தும் அமைப்பு எது?

(அ) தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் எத் தேர்வுகளை நடத்துகிறது?

### தமிழ் இரண்டாம் தாள்

01. பிறிதுமொழிதலணி 02. அ. இரட்டுறமொழிதல் 03. ஆ. தற்குறிப்பேற்ற அணி

04. அ. விள்ளல் 05. அ. வஞ்சப்புகழ்ச்சி அணி

06. அழகு 07. துப்பு 08. தன் + குறிப்பு + ஏற்றம் + அணி 09. வயல், வீடு 10. சொற்பொருள் பின்வருநிலையணி

11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லின் மிகும். தீ + பெட்டி = தீப்பெட்டி

12. மாணாக்கர்களை வட்டமாக உட்காரச் செய்

13. இன்று, இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது.

14. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்

15. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை அறிந்த வளவன் துரித உணவு வகைகளை உண்பதைத் தவிர்த்து விட்டான்

16. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

17. எண்ணெய் விலை அதிகமாகி விட்டது.

18. அந்த அறிவியல் அறிஞரின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.

19. மெய் - உடல், உண்மை

20. கயிறு திரித்தல் - இல்லாததைக் கூறுதல்

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள் – மாதிரி வினாத்தாள் 2012

### தமிழ் முதல் தாள்

01. ஆ. காலமறிதல் 02. இ. மாணிக்கம் 03. இ. சடையப்ப வள்ளல்

04. இ. சொத்துரிமை 05. அ. இன்னாசெய்யாமை 06. இ. பேச்சுக்கலை

07. சிறந்த செல்வம் 08. திருத்தொண்டர் புராணம் 10. பொருளியல்

09. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா 11. வேடிக்கையாக 12. ஐந்து

13. தேவாரம் - திருநாவுக்கரசு

14. சீறாப்புராணம் - உமறுப்புலவர்

15. கலித்தொகை - நல்லந்துவனார்

16. பூத்தது மானுடம் - சாலை. இளந்திரையன்

17. இலக்கியங்கள் எப்போது தோன்றின?

18. தமிழ்மொழியே இறவாத நிலை தரும் என்று கூறியவர் யார்?

19. தமிழர்கள் எந்த நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?

20. எங்குப் பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. செய்தொழில் 02. ஆ. வெற்றிலைபாக்கு

03. இ. உயர்ந்தோங்கிய மலையைக் கண்டான் 04. ஆ. ஔகாரக்குறுக்கம் 05. ஈ. வந்தான்

06. கெடுதல் 07. புரைய 08. பாலை 09. இனமொழி 10. அமுதமொழி

11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லின் மிகும். தீ + பெட்டி = தீப்பெட்டி

12. பெற்று 13. இளமையில் கற்க வேண்டும்.

14. படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் உள்ள**ன.**

15. உரிமைகுரல் கொடுத்த நல்லோர்களை**த்**தான் நாம் சீர்திருத்த**ச்** செம்மல்கள் என**ச்** சிந்தை மகிழ**ப்** பாராட்டுகிறோம்.

16. பொய்யா விளக்கு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

17. வலப்பக்கச் சுவரில் எழுதாதே

18. மண் என்றால் நிலம் என்பது பொருள். தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை , மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பிரித்தார்கள்.

19. கொடி கட்டிப் பறத்தல் - தனிப் புகழோடு விளங்குதல்

20. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள் – பொதுத்தேர்வு மார்ச் 2012

### தமிழ் முதல் தாள்

01. இ. பாரதிதாசன் 02. ஆ. சேரநாடு 03. அ. எதுகை

04. அ. திருக்குறள் 05. இ. இசை 06. அ. அறிஞர் அண்ணா

07. நெற்கதிர் 08. மீனாட்சி சுந்தரனார் 09. ஒட்டக்கூத்தர்

10. ஞால் 11. மாக்சுமுல்லர் 12. இறவாத நிலை

13. கலித்தொகை - நல்லந்துவனார்

14. சீறாப்புராணம் - உமறுப்புலவர்

15. பூத்தது மானுடம் - சாலை. இளந்திரையன்

16. தேவாரம் - திருநாவுக்கரசர்

17. எங்கு பயில்வோர்க்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?

18. காந்தியடிகள் எதை கதர் என்று கருதினார்?

19. பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?

20. எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. இ. படம் பார்த்தான் 02. ஆ. படித்த கயல்விழி 03. இ. புறா, பருந்து

04. ஈ. கதிர்வேல் வெற்றிலை தின்றான் 05. இ. நேர் நிரை

06. ஐகாரக்குறுக்கம் 07. போல 08. முல்லை

09. இனமொழி 10. மகரஈற்றுப் புணர்ச்சி

11. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது. எ.கா. கலகல, பளபள

12. முகமதி - மதிமுகம்

13. திருக்குறளை அறியாதவர் உளரோ? (அ) திருக்குறளை யார் அறிவர்?

14. பெண்கள் பெற வேண்டிய**வை** பெண் கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

15. தமிழில் வரலாற்று**க்** கருத்துக்களையும், பண்பாட்டு**க்** கூறுகளையும் காண முடியும்

16. இந்த சட்டை மிகவும் விலை உயர்ந்தது.

17. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

18. அம்பத்கர், “ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது” என்றார்.

19. ஆசிரியர் கற்பித்த இலக்கணம் பசுமரத்தாணி போல மனதில் பதிந்தது.

20. வாழையடி வாழையாக - பரம்பரை பரம்பரையாக

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள் – பொதுத்தேர்வு ஜூன் 2012

### தமிழ் முதல் தாள்

01. ஆ. தளர 02. இ. மாணிக்கம் 03. ஆ. நற்றிணை

04. இ. தேவாரம் 05. ஆ. உலவு 06. இ. சொத்துரிமை

07. பெரியபுராணம் 08. அதிவீரராமபாண்டியன் 09. திறனறிந்து

10. பெரியபுராணம் 11. புதுப்புதுத் துறைகள் 12. நகர்த்தும் வண்டியில்

13. உழுவை - புலி

14. செறிவு - கூறியது மறாஅமை

15. இடர் - துன்பம்

16. இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்

17. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது எது?

18. ஆசிரியர் என்பவர் எவ்வாறு விளங்க வேண்டும்?

19. இலக்கியக் கூறுகள் எவைப் போன்றவை?

20. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் யார்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. ஆ. படிப்பான் 02. அ. கண் 03. அ. பசு 04. ஈ. நடுமையம்

05. ஈ. திசைப் பெயர்ப் புணர்ச்சி 06. பெயரெச்சம் 07. ஏவல்

08. முல்லை 09. போன்ற 10. ஆய்தக்குறுக்கம்

11. ஓர் எழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. தீ + பெட்டி = தீப்பெட்டி

12. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் 13. ஆடு - கன்று, சிங்கம் - குருளை

14. வேல்விழி திருக்குற**ளைப்** படித்தாள் (ஐ - வேற்றுமை உருபு)

15. இன்று பேருந்துகள் ஓடா.

16. தமிழில் வரலாற்று**க்** கருத்துக்களையும், பண்பாட்டு**க்** கூறுகளையும் காண முடியும்

17. நான் இந்தக் **கல்லூரியின் முன்னாள் மாணவன்**

18. வலப் பக்கச் சுவரில் எழுதாதே

19. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.

20. இ. பரம்பரை பரம்பரையாக

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள்–பொதுத்தேர்வு அக்டோபர் 2012

### தமிழ் முதல் தாள்

01. அ. பாரதிதாசன் 02. ஆ. எதுகை 03. அ. கம்பர்

04. அ. பாரத ரத்னா 05. இ. பைபிள் 06. அ. மூன்றாம்

07. புரட்சிக் கவிஞர் 08. எட்டுத்தொகை 09. அகங்காரம்

10. பேரறிஞர் அண்ணாதுரை 11. செல்லுலாய்டு 12. முரண்களை, முட்டறுத்தவர்

13. சாலை. இளந்திரையன் - பூத்தது மானிடம்

14. திருநாவுக்கரசர் - தேவாரம்

15. நல்லந்துவனார் - கலித்தொகை

16. உமறுப்புலவர் - சீறாப்புராணம்

17. தமிழர்கள் எந்த நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?

18. யார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்?

19. பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர தகுதிகள் யாவை?

20. அறிவு அற்றம் காக்கும் கருவி என்றவர் யார்?

### தமிழ் இரண்டாம் தாள்

01. ஆ. ஐகாரக்குறுக்கம் 02. இ. உறுவது கூறல் 03. ஆ. சென்ற கோதை

04. அ. வேங்கை 05. இ. குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகிறது

06. வினையெச்சம் 07. உறழ 08. மருதம்

09. பண்புப் பெயர்ப் 10. வெட்சி

11. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது. எ.கா. கலகல, பளபள

12. மாணாக்கர்க**ளை** வட்டமாக உட்காரச் செய்க. (ஐ - வேற்றுமை உருபு)

13. பாரதியார் செய்யுளை **இயற்றினார்**.

14. நகை - அணிகலன், சிரிப்பு

15. அறிவு ஒளி பெற அங்கே சோதி தரிசன**ப்** புதுமையை**ப்** புகுத்தினார்

16. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்த**து**.

17. வேலன் **தன் சொந்தத்** தொழிலில் அதிக **வருவாய்** ஈட்டினான்.

18. எண்ணெய் விலை அதிகமாகி விட்டது

19. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.

20. வாழையடி வாழையாக - பரம்பரை பரம்பரையாக

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள் – பொதுத்தேர்வு மார்ச் 2013

### தமிழ் முதல் தாள்

01. ஆ. திருவாதவூர் 02. ஆ. சேரநாடு 03. அ. பன்னாடு தந்த மாறன் வழுதி

04. ஆ. சொத்துரிமை இல்லாமை 05. இ. தேவாரம் 06. அ. புறநானூறு

07. பெரியபுராணம் 08. ஏமரா 09. உமறுப்புலவர்

10. மாக்சுமுல்லர் 11. பேச்சுக்கலை 12. வால்ட் டிஸ்னி

13. நாளிகேரம் - தென்னை

14. நாவாய் - படகு

15. கவிகை - குடை

16. இளைப்பாறுதல் - ஓய்வெடுத்தல்

17. சமத்துவம் என்றால் என்ன?

18. காந்தியடிகள் எதைப் படித்ததன் மூலம் மன உறுதியைப் பெற்றார்?

19. யாருடைய உள்ளத்தில் இறைவன் நடம் புரிவார்?

20. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி எது?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. வருவான் 02. ஆ. வெளிப்படை 03. இ. பன்னிரண்டு

04. ஈ. திசைப் பெயர்ப் புணர்ச்சி 05. இ. நேர்நிரை 06. முல்லை

07. எட்டு 08. பிறிது மொழிதல் 09. அன்ன 10. ஆய்தக்குறுக்கம்

11. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது. எ.கா. கலகல, பளபள

12. படித்து 13. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

14. அய்யோ! கிளி கல்லால் அடிபட்டதே! 15. இன்று பேருந்துகள் ஓடா

16. தமிழில் வரலாற்று**க்** கருத்துக்களையும், பண்பாட்டு**க்** கூறுகளையும் காண முடியும்

17. வலப் பக்கச் சுவரில் எழுதாதே

18. இறைவனை நோக்கி புனிதப் பயணம் செல்லல் அடியவர்களுக்கான வழி.

19. ஓட்டுநர், நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்.

20. முதலைக் கண்ணீர் - பொய்யழுகை

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள்–பொதுத்தேர்வு ஜூன் 2013

### தமிழ் முதல் தாள்

01. ஆ. சேரநாடு 02. இ. பாரதியாரை 03. இ. நற்றிணை

04. ஆ. அகம், புறம் 05. இ. ஐந்து 06. இ. தாராபாரதி

07. பெரியபுராணம் 08. குடி 09. பாரதிதாசன்

10. பாரத ரத்னா 11. வேடிக்கையாக 12. மனித நாகரிகத் தொட்டில்

13. சீறாப்புராணம் - உமறுப்புலவர்

14. பூத்தது மானுடம் - சாலை. இளந்திரையன்

15. இடர் - துன்பம்

16. இந்து - நிலவு

17. பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் யார்?

18. மேடைப்பேச்சு எத்தகையது?

19. காந்தியடிகள் எதை கதர் என்று கருதினார்?

20. இராமலிங்கர் சத்தியதருமச்சாலையை நிறுவிய இடம் எது?

### தமிழ் இரண்டாம் தாள்

01. அ. திண்ணை 02. அ. பசு 03. ஈ. தாமரை 04. அ. உயர்ந்தோங்கிய

05. ஆ. கிளி, மயில் 06. செப்பலோசை 07. போல 08. அழகு

09. வெட்சி 10. பண்புப் பெயர்ப் புணர்ச்சி

11. ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. தீ + சட்டி = தீ<u>ச்</u>சட்டி

12. பாதமலர் - மலர்ப்பாதம் 13. முக்கனி - மா, பலா, வாழை

14. செய்தித் தொடர்

15. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தா***<u>ர்/ள்.</u>***

16. ஏழைகளுக்கு***<u>ப்</u>*** பொருள்பெறாமல் வாதாடி நீதி பெற்று***<u>த்</u>*** தந்தார்.

17. ***<u>இன்று</u>*** ஒரு கிலோ ***<u>அவரைக்காய்</u>*** வாங்கி வந்தேன்

18. இந்த ***<u>சட்டை</u>*** மிகவும் ***<u>விலை உயர்ந்தது</u>***

19. இளமையில் கற்கும் கல்வி ***<u>பசுமரத்தாணி போல</u>*** மனதில் பதியும்.

20. கீரி - பிள்ளை

கோழி - குஞ்சு

## பத்தாம் வகுப்பு ஒரு மதிப்பெண்கள் விடைகள்–பொதுத்தேர்வு அக்டோபர் 2013

### தமிழ் முதல் தாள்

| | | |
|---|---|---|
| 01. ஆ. எட்டுத்தொகை | 02. அ. ஊதியம் | 03. ஆ. ஆறு |
| 04. ஆ. பெரியார் | 05. இ. பைபிள் | 06. அ. இராமலிங்கர் |
| 07. பெருமாள் திருமொழி | 08. சாலை. இளந்திரையன் | 09. வில்லிபுத்தூரார் |
| 10. பாரத ரத்னா | 11. கல்விப் படங்கள் | 12. திருமூலர் |

13. தேவாரம் - திருநாவுக்கரசர்

14. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்

15. பெரியபுராணம் - சேக்கிழார்

16. ஏலாதி - கணிமேதாவியார்

17. பேச்சின் முக்கூறுகள் யாவை?

18. உலக இலக்கியங்களுள் முதன்மைப் பெற்றுள்ளவை எவை?

19. மனித நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படுவது எது? (அ)
இலெமூரியாவை எவ்வாறு அழைப்பர்

20. இடைநிலை ஆசிரியர் பயிற்சி எத்தனை ஆண்டுகள் ஆகும்.

### தமிழ் இரண்டாம் தாள்

01. ஆ. மகரக்குறுக்கம் 02. இ. இரட்டைக் கிளவி

ள 03. ஆ. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் 04. அ. ஏழு 05. இ. பிறப்பு

06. தெரிநிலை வினைமுற்று 07. வஞ்சித்திணை 08. அறியா வினா

09. உறழ் 10. வஞ்சப்புகழ்ச்சி அணி

11. ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும். எ.கா. தீ + சட்டி = தீ**ச்**சட்டி

12. பிரித்த 13. கலவைத் தொடர்

14. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும்
போதாது

15. மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

16. எல்லா மாணவர்களும் பேருந்தில் ஏறி பள்ளிக்குச் சென்றார்கள்

17. மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை

18. கதவைத் தாழ்ப்பாள் போட மறந்துவிட்டேன்

19. அத்திபூத்தாற் போல் என் நண்பன் என்னுடைய வீட்டிற்கு வந்தான்

20. தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப்
பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.